## தம்புள்ள மாநகர சபை

## மாத்தளை மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 அக்டோபர் 25 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 செப்டம்பர் 11 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 23 திகதி தம்புள்ள மாநகர சபையின் நகரபிதாவுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான தம்புள்ள மாநகர சபையின் நிதி நிலைமையையும், அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

-----------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) களஞ்சிய பொருட்கள் தொடர்பாக களஞ்சிய முற்பண முறையை கடைபிடிக்கப்படாமல் ஆண்டு இறுதியில் கடைபிடிக்காமல் ஆண்டு இறுதியில் களஞ்சியப் பேரேட்டில் காணப்படும் மீதியினை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் நிதிக் கூற்றுக்களுடன் சமர்பித்திருக்கவில்லை.

(இ) நிதிச் செயலாற்றுகை கூற்றுடன் முன்னைய ஆண்டிற்கான எண்ணிக்கை ஒப்பீட்டு ரீதியாக சமர்பித்திருக்கவில்லை

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 146,345 பெறமதியான 36 பொறியும் பொறித் தொகுதியும் தொடர்பாக பெறுமானத் தேய்வு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான முத்திரை கட்டண வருமானம் ரூபா 5,031,655 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) பஹலவெவ இல் இருந்து கணடளம பாதை வரை பாதையை சரளை கற்கள் பரப்பும் நிர்மாண வேலையில் ரூபா 25,000 இந்கான தடுத்து வைத்தல் பணம் நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் இன் கீழும் அதேபோல் வைப்புக் கணக்கின் கீழும் காட்டப்பட்டிருந்தன

(ஈ) நாட்குறிப்புகளின் பிரகாரம் உறுதிச் சான்றுகள் தயாரித்திருக்கவில்லை. அத்துடன் நாட்குறிப்புகளை பதிவு செய்துள்ள பதிவேடு தயாரித்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது ரூபா 460,880 இற்காக கொள்வனவு செய்திருந்த முச்சக்கர வண்டியின் பெறுமதியினை மோட்டார் வாகனம் மற்றும் வாகனக் கணக்கில் கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

--------------------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 5,797,221 இற்கான 03 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் பொருத்தமான துனைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 178,577 இற்கான தேறிய மறைப் பெறுமதி அவதானிக்கப்பட்டது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------

06 கணக்கு விடயங்கள் தொடர்பாக சான்றுகள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 290,919,207 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

2 நிதி மீளாய்வு

--------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செலவுகளை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 10,969,900 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 18,320,559 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 29,290,459 இற்கான முன்னேற்றம் ஒன்று காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

-----------------------------

2.2.1 வருமானம் சேகரிப்பதன் செயலாற்றுகை

-------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதவரி மற்றும் வரியும்

-----------------------------------

மீளாயவாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை மீதி மற்றும் ஆண்டின் போது பில் போடப்பட்ட வீதவரியின் கூட்டுத்தொகை ரூபா 7,825,576 தொகை எனினும் ஆண்டின் போது அறவிடப்பட்டிருப்பது அவற்றில் நுற்றிற்கு 48 எனப்படும் ரூபா 374,177 மாத்திரமே. இதன் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாற அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 4,079,369 பெறுமதியை கொண்டிருந்தது..

(ஆ) கடை வாடகை

---------------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட கடை வாடகை மீதி ரூபா 38,545,940 ஆக காணப்பட்டதுடன், ஆண்டின் போது பில் போடப்பட்டவையுடன் அறிவிடப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா 44,301,323 தொகை எனினும் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்தது. அவற்றில் நூற்றிற்கு 11 என்ப்படும் ரூபா 4,828,400 மாத்திரமே. இதன் பிரகாரம் வருட இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை தொகை ரூபா 39,472,923 ஆகிய உயர்ந்த பெறுமதி ஒன்றினை பெற்றிருந்தது.

2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

---------------------------------------------------------------------------------

மத்திய மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப்பணம் என ரூபா 1,274,165 உம் மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 5,627,210 உம் என அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.2.3 ஏனைய வருமானங்கள்

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2008 ஜனவரி 25 ஆம் திகதிய இலக்கம் 1523/16 கொண்ட இலங்கை குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் (அதி விஷேட) ''இ'' பகுதி 4.2 இன் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் மூன்று வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் மூன்று மாதங்களுக்கு முன்னர் அதனை நாளதுவரை ஆக்கப்பட வேண்டும் எனினும் அதற்கு இணங்க செயற்படாமையால் ரூபா 92,000 இற்கான வருமானம் ஒனறினை இழந்துள்ளது.

(ஆ) குறிப்பிட்ட வர்த்தமானி ''இ'' இன் பகுதி 1:3:2 இன் பிரகாரம் பரிசோதனை மேற் கொள்ளும் கட்டணம் உற்பட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திர முறைமையின் செயற்பாடுகளுக்காக அறவிடப்படும் கட்டணத்திற்காக வேறாக வரவு தலைப்பு ஒன்று பேணப்பட வேண்டும் எனினும் மாநகர சபையினால் அவ்வாறு செயற்படாமையால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் தொடர்பாக வருமானம் உறுதியாக எவ்வளவு என கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

(இ) சபைக்கு சொந்தமான இரண்டு நகர மண்டபங்களை கட்டண அறவீடு இன்றி வெளிசாராருக்கு வழங்கப்பட்டுள்ளமையால் 2013 ஆண்டின் போது ரூபா 12,260 இற்கான வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் பயன்படுத்தப்படும் 16 வாகனங்களின் உரிமை சட்டநிதியாகக் சாட்டப்பட்டிருக்கவில்லை. அத்துடன், அவ்வாகனங்களுக்கான வருடாந்த அனுமதிப்பத்திரம் மற்றும் அவற்றில் 12 வாகனங்களுக்காக வருடாந்த காப்புறுதி மேவகையும் பெற்றிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக நகர பிதாவின் உத்தியோக பூர்வ வாகனத்திற்காக எரிபொருள் வரையறை சபையின் பொதுக் கூட்டத்தினால் தீர்மானித்திருக்கவில்லை.

(இ) 2013 இன் 17 ஆம் இலக்க பெறுமதி கூட்டிய வரி(திருத்தம்) சட்டத்தின் பிரகாரம் சபை வரி செலுத்த வேண்டிய வழங்கல்களின் காலாண்டுப் பெறுமதி ரூபா 3,000,000 இனை மிகைக்குமிடத்து அல்லது வரி செலுத்த வேண்டிய வழங்கல்களின் வருடாந்தப் பெறுமதி ரூபா 12,000,000 இனை மிகைக்குமிடத்து பெறுமதி கூட்டியவரி செலுத்தப்பட வேண்டும் எனினும் நகரசபை பெறுமதி கூட்டியவரிக்காக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அங்கீகரிக்கப்பட்டுள்ள துணை விதியின் 90/ஏ பக்கத்தின் பகுதி 11 விளம்பர அறிவித்தல் பற்றிய ஏற்பாடுகள் மற்றும் 2013 மார்ச் 01 திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தொகையை விட ரூபா 1,162,000 குறைவாக அறவிடப்பட்டிருந்தது என காணக்கூடியதாக இருந்தது.

(உ) பொதுக் கூட்டத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் 2013 ஜுன் 19 திகதி நடைபெற்ற சமாதான பேரணிக்காக பங்கு பற்றிய 30 பேருக்கு பகல் மற்றும் இரவு உணவு தயாரிப்பதற்காக ரூபா 10,500 செலவிடப்பட்டுள்ளது.

(ஊ) மாநகர சபை ஊழியர்களுக்கு பல்வேறு விடயங்களுக்காக பல்வேறு படிகள் கொடுப்பனவு செய்வதனால் மத்திய மாகாண ஆளுனரின் அங்கீகாரத்தினை பெற்றிருக்காமல் ரூபா 28,932 இற்கான படியொன்று செலுத்தப்பட்டிருந்தது.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

-------------------------------------------------------------------------------------

மத்திய மாகாண பிரதான செயலாளர் அலுவலகத்தில் இருந்து வழங்கியிருந்த 02 வாகனங்களை திருத்தி பயன்படுத்தப்படாமலும் குறை பயன்பாட்டுடனும் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---------------------------------------------------------------

சபையின் அதிகார பிரதேசத்தை சேர்ந்த கழிவுப் பொருட்கள் சபையின் மூன்று டிரக்டர்கள் ஊழியர்கள் மூலம் திகம்பதஹ பிரதேசத்தில் அரங்சாங்கக் காணி ஒன்றில் போடப்பட்டுள்ளது. இது தொடர்பாக பற்பல சிக்கல்கள் ஏற்பட்டிருந்ததாக சபையினால் குப்பைகளை மீள்சுழற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக கவனம் செலுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

3.4 ஒப்பந்த நிருவாகம்

---------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தொழில்நுட்ப அலுவலர்களினால் குறிப்பிட்ட நிர்மாண வேலை தொடர்பாக முறைப்படி ஆய்வு செய்து அளவை அறிக்கைகள் பெற்றுக் கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்காமையால் 2013 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளின் வேலை விடயங்களுக்கு மிகையாகவும் மற்றும் குறைவாகவும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) சபையின் வேலை அத்தியட்சர்கள் மற்றும் தொழிநுட்ப அலுவலரினால் பாதை முறைப்படி இனங்காணவில்லை எனவும் குறிப்பிட்ட வேலையின் ஆரம்பம் மற்றும் முடியும் இடம் என்பன தெளிவாக காட்டுவதற்கு முடியாதுள்ளது. சில வேலைகள் தொடர்பாக தகவல்கள் ஒப்பந்தக்காரரிடம் கூட கேற்பதற்கு நேரிட்டது என அது மிகவும் மோசமான நிலைமை எனவும் இடப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது நேர் உழைப்பின் கீழ் பல நிர்மாண வேலைகள் மேற் கொள்ளப்பட்டிருந்தன. அந்த நிர்மாண வேலைகளின் பிழையற்ற அளவை அறிக்கைகள் தயாரித்திருக்கவில்லை. அத்துடன், வேலை தளத்திற்கு வழங்கப்பட்ட பொருட்கள், பற்றிய விபரங்கள் காணப்பட்ட போதும் பண்டங்கள் மீள் களஞ்சியத்திற்கு ஒப்படைத்த சந்தர்ப்பங்கள் காணப்படவில்லை. நேர் உழைப்புக்காக குறிப்பிட்ட நிர்மாண வேலைக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட செக்ரோல் கோவைப்படுத்தியிருக்கவில்லை.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

---------------------------------------------------------------------

4.1 அகக் கணக்காய்வு

----------------------------

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 133(1) மற்றும் (2) பிரமாணத்தில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அகக் கணக்காய்வு அலகு ஒன்று அமைத்திருக்கவில்லை.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் செலவு விடயம் ஒன்றிற்கான ரூபா 8,891,000 மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் வேறு செலவு விடயம் ஒன்றிற்காக மதிப்பீட்டு தொகையை விட மிகைத்து செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் பாதீடு பயன்தரு நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றான பயன்படுத்தி இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கணக்காய்வு

(இ) பாதீட்டு கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்

(உ) சொத்து முகாமைத்துவம்

(ஊ) இன்வென்ட்ரி கட்டுப்பாடு